தலைமைச் செயல்
அலுவலரின் கடிதம்

# சரியான திசையில் நடவடிக்கைகளை தொடர்கிறோம்

*5/27/2021 வெளியிடப்பட்டது*

தடுப்பூசிகளின் கிடைக்கும்தன்மையின் அதிகரிப்பு மற்றும் அதிக உற்பத்தி அளவுகளின் முன் கணிப்புடன் சேர்த்து, ஒன்றிணைந்து சவால்களை வெல்வதற்கான கூப்பர் ஸ்டாண்டர்டின் முயற்சிகள், புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையைத் தருகின்றன.

2021 இல் எங்கள் முதல் காலாண்டின் வருவாய் பதிவில் குறிப்பிட்டுள்ளபடி, நாங்கள் 98% பச்சை வாடிக்கையாளர் ஸ்கோர்போர்டுகள், 98% பச்சை தொடக்க ஸ்கோர்போர்டுகள், மற்றும் $18M உற்பத்தி சேமிப்புடன், வலுவான இயக்க செயல்திறன் மற்றும் சிறிய அளவில் அதிகரித்த மேம்பாட்டை கொண்டிருந்தோம். உற்பத்தி அளவுகள் சீராக இருக்கின்றன, அவை ஜூன் மாதத்தில் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் ஜூலை மாதத்திற்குள் நாம் இன்னும் அதிக அளவுகளை எட்டி பிடிக்க வேண்டும். தினசரி எதிர்பார்ப்புகளை தாண்டுவதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம், அதே மாதிரி அனைத்து பங்குதாரர்களையும் இலக்குகளை தாண்டி செயல்பட வைப்பதற்கான வாய்ப்புகளைத் தொடர்ந்து தேடுகிறோம். இதை சொல்லியப்பிறகு, பாதுகாப்பு மற்றும் தரத்திற்கான அதே அர்ப்பணிப்பை வலுவான இரண்டாவது பாதி முழுவதிலும் வழங்க எங்கள் குழு தயாராக உள்ளது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

எங்கள் 2020 கார்ப்பரேட் ரெஸ்பான்சிபிலிட்டி அறிக்கையான "ஸ்டிராங்கான: டீம், பார்டனர்ஷிப்ஸ், பிசினஸ்" சமீபத்தில் cooperstandard.com -ல் வெளியிடப்பட்டதை பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் கொள்கிறேன் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான மற்றும் கழிவுகளை குறைப்பதற்கான புதிய குறிக்கோள்களுடன் எங்கள் வணிகத்தின் அனைத்து துறைகளிலும் உலகத்தரம் வாய்ந்த செயல்திறனை அடைகின்ற முன்னேற்றத்தை பற்றியும் மற்றும் எங்கள் பன்முகத்தன்மை, சேர்த்தல் மற்றும் உடனிருக்கிற உணர்வை தரும் செயல்பாடுகள் போன்ற பிற வணிக முயற்சிகளைப் பற்றிய புதுப்பிப்புகளையும். இந்த அறிக்கை வழங்குகிறது. செய்யப்படும் முக்கியமான வேலைகள் மற்றும் எங்கள் ஊழியர்கள் உட்பட எங்கள் அனைத்து பங்குதாரர்களுக்கும் முக்கியமான தலைப்புகளில் நாங்கள் செய்த சாதனைகள் பற்றி படிக்க சிறிது நேரம் ஒதுக்குங்கள்.

முன்பே குறிப்பிட்டுள்ள மாதிரி, ஊழியர்கள் தங்கள் பகுதியில் கிடைக்கும்போது கொரோனா வைரஸ் தடுப்பூசியைப் பெறுவதைக் கருதுமாறு உலகளாவிய தலைமைக் குழுவானது கடுமையாக ஊக்குவிக்கிறது, மேலும் வெளிப்பாடு மற்றும் வைரஸ் பரவுவதைக் குறைக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து கடைப்பிடிக்குமாறு அனைவருக்கும் நினைவூட்டுகிறது. வலது பத்தியில் சேர்க்கப்பட்டுள்ள கூடுதல் விவரங்களைப் பார்க்கவும். தடுப்பூசி விகிதங்கள் அதிகரித்து, அரசு/சுகாதார வழிகாட்டுதல்கள் மேம்படுத்தப்படும் நிலையில், கூப்பர் ஸ்டாண்டர்டின் "ஆபரேஷன் பிளேனுக்கு பாதுகாப்பாக திரும்புதல்" திட்டத்திலும் புதுப்பிப்புகள் செய்யப்படுவதை பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தடுப்பூசி விகிதங்களின் அதிகரிப்புடன் இடங்களிலும் முன்னேற்றம் ஏற்படுவதால், இது சில COVID வழிகாட்டுதல்களை எளிதாக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

பெரும்பாலான இடங்களில் COVID வழக்குகள் குறைகின்ற போதிலும், சில நாடுகளில் இன்னும் அதிக எண்ணிக்கையில் பாதிப்பு இருப்பது நமக்கு நினைவூட்டப்படுகிறது. எங்கள் வர்கின்ஹா, பிரேசில் வசதியில் இருந்த ஒரு ஊழியர் இறந்ததை நான் மிகுந்த வருத்தத்துடன் பகிர்ந்து கொள்கிறேன். கிளெசியோ ஒலிவேராவின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சகாக்களுக்கு எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். மே 7ஆம் தேதி நிலவரப்படி, நிறுவனத்தில் COVID-19 -ஆல் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 47 இருந்தது.

முடிவுகளை வழங்குவதற்கும், உங்களையும் மற்றவர்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கவும், தொற்றுநோய் காலம் முழுவதும் நீங்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு நன்றி.

**ஜெஃப் எட்வர்ட்ஸ் (Jeff Edwards)**
தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி



**Www.cooperstandard.com இல் கூப்பர் ஸ்டாண்டர்டின் கார்ப்பரேட் ரெஸ்பான்சிபிலிட்டி அறிக்கையை பார்க்கவும்**

**தடுப்பூசிகள் ஊக்குவிக்கப்பட்டன**
COVID-19 ஆல் பாதிக்கப்பட்ட சிலர் வைரஸிலிருந்து மீண்டு வந்தப்பிறகும் நீண்ட காலத்திற்கு சோர்வு, வாசனை மற்றும் சுவை இழப்பு போன்ற அறிகுறிகளால் பாதிக்கப்படலாம் என்று ஆய்வுகள் காட்டுகின்றன. தடுப்பூசி போடுவது வைரஸைத் தடுக்க உதவுவது மட்டுமல்லாமல், நீங்கள் அதனால் பாதிக்கப்பட்டால் கூட, நீடித்த அறிகுறிகளுடன் உங்களை விட்டுச்செல்லும் கடுமையான நோயாக அதை மாறவிடாமல் தடுக்கும். COVID-19 காரணமாக நீண்ட கால அறிகுறிகளைக் கொண்ட சில கண்டறியப்படாத நோயாளிகளுக்கு கூட தடுப்பூசிக்குப் பிறகு அறிகுறியில் நிவாரணம் இருப்பதாக சில அறிக்கைகள் உள்ளன.

**பின்வரும் நிலைகளில் உங்கள் உள்ளூர் HR துறையைத் தொடர்புகொள்ளவும் மற்றும் பணிக்கு வராதீர்கள்:**

- ஜுரம் (100.4 °F / 38 °C அல்லது அதற்கு மேல் இருந்தால்) அல்லது சளிக்காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருந்தால்
- உங்கள் உள்ளூர் சுகாதாரத் துறை அல்லது சுகாதார வழங்குநரால் சுய-தனிப்படுத்தல் அல்லது சுய-தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்தப் பட்டிருக்கிறீர்கள்
- கடந்த 14 நாட்களில் COVID-19 சோதனையில் நேர்மறை முடிவு வந்திருக்கும் அல்லது அதற்காக சோதிக்கப்படும் எவருடனும் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கிறீர்கள்

**COVID வழிகாட்டல்கள்**

- கைகளை அடிக்கடி கழுவவும்
- கைகளை மற்றவர்களுடன் குலுக்க வேண்டாம்
- இருமும்போதும் தும்மும்போதும் மூடிக்கொள்ளுங்கள்
- மற்றவர்களிடமிருந்து 1-2 மீட்டர் / 3-6 அடி தூரத்தில் இருங்கள்
- சந்திப்புகளைக் குறுகியதாக வைத்திருங்கள்
- பொதுப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துங்கள்
- மக்கள் கூட்டமுள்ள இடங்களைத் தவிர்த்திடுங்கள்
- நோய்வாய்ப்பட்டிருக்கும்போது வீட்டிலேயே இருங்கள்

**நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகள்**

- உங்களுடைய மேற்பார்வையாளர் அல்லது மேலாளர்
- மனிதவளக் குழுவின் எந்த உறுப்பினரும்
- சட்டத் துறை அல்லது நெறிமுறைகள் மற்றும் இணக்க அலுவலகம் (ethicsandcompliance@cooperstandard.com)
- உலகளாவிய நெறிமுறைகள் மற்றும் இணக்கக் குழுவின் எந்தவொரு உறுப்பினரும்
- கூப்பர் ஸ்டாண்டர்ட் இன்டெக்ரிடிலைன், விரும்பினால் அநாமதேயமாக*, www.csintegrityline.com என்ற இடத்தில்.
  *நாங்கள் செயல்படும் ஒரு சில நாடுகள் அநாமதேய அறிக்கையிடலை அனுமதிப்பதில்லை என்பதை குறித்துக் கொள்ளவும்.